**சுருக்கம்**

சிறுபான்மையினர் நலன் – 2021–2022–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு – கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைத்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிநஆபி1) துறை**

அரசாணை (நிலை) எண்.39 நாள் 25.05.2022

திருவள்ளுவர் ஆண்டு 2053
வைகாசி–11

படிக்க:

சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநரின் கடித எண்.அ6/ 2861/2021, நாள் 04.09.2021, 15.09.2021, 25.10.2021, மற்றும் 09.03.2022.

**ஆணை:–**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 08.09.2021 அன்று 2021–22–ஆம் ஆண்டுக்கான இத்துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

"கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்படும்."

2. மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:–

அ) தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு பிரிவினரை சார்ந்த கிறித்துவர்கள் உள்ளனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் தோராயமாக குறைந்தது 500 முதல் 1000 நபர்களுக்கும் அதிகமான திருச்சபை ஊழியர்களும் இதர பணியாளர்களும் திருச்சபை பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆ) கிறித்துவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள், வேதியர்கள், சீஷப்பிள்ளைகள், பாடகர்கள், கல்லறை பணியாளர்கள், கிறித்துவ அனாதை இல்லங்கள், அபலையர் நிலையங்கள், மாற்றுத் திறனாளிகள் பராமரிப்பு இல்லங்கள், தொழுநோயாளியர் மறுவாழ்வு இல்லங்களின் பணியாளர்கள் ஆகியோருக்கு முறையான மாதாந்திர ஊதியம் என்று இல்லாமல், தேவாலயத்திற்கு வரும் அங்கத்தினரிடமிருந்து பெறப்படும் நன்கொடை தொகையில் இருந்து மட்டுமே சிறுதொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

இ) எனவே, மேற்படி கிறித்துவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக நல வாரியம் உருவாக்கப்பட்டு இவ்வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கு தகுதியுடையவராவர்.

ஈ) மேலும், அவ்வாரியத்தில் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் ஏனைய அமைப்பு சாரா வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று

- விபத்து நிவாரணம்,
- கல்வி உதவித்தொகை,
- திருமண உதவித்தொகை,
- மகப்பேறு உதவித்தொகை மற்றும்
- முதியோர் ஓய்வூதியம் ஆகிய பல்வேறு நலத் திட்ட உதவிகளை கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் மூலம் செயல்படுத்தலாம்.

3. அத்துடன், கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர் பதிவுக்குரிய நபர்களைக் கண்டறிந்து சான்றிதழ்களை வழங்குவதற்கு பின்வரும் திருச்சபைகளை அங்கீகரிக்கலாம் என்றும் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்:–

சான்றிதழ்கள் வழங்க அங்கீகரிக்கப்பட்டிருக்கும் திருச்சபைகளின் விவரங்கள்:

I. ரோமன் கத்தோலிக் திருச்சபை அதன் பேராயர்கள் மற்றும் ஆயர்கள் (Roman Catholic Church – it's Arch Bishops & Bishops)

II. புராட்டஸ்டாண்ட் திருச்சபைகள் ஆயர்கள் (Protestant Churches including the following denominations)

| | | |
|---|---|---|
| i) | Church of South India | Bishops |
| ii) | Tamil Evangelical Lutheran Church | Bishop<br>President |
| iii) | Arcot Lutheran Church | Bishop<br>President |
| iv) | Indian Evangelical Lutheran Church | President |
| v) | Methodist Church of India | Bishop |
| vi) | Advent Church | Bishop<br>President |
| vii) | Evangelical Church of India | Moderator |
| viii) | Marthoma Syrian Church | Bishop |

| | | |
|---|---|---|
| ix) | Syrian Orthodox Church | Bishop |
| x) | Baptist Churches | Chairman |
| xi) | Salvation Army | Commander |

III. சினாட் ஆப் பெண்டகோஸ்டல் சர்ச்சஸ் – துணைத் தலைவர் (Synod of Pentecostal Churches – Vice President).

IV. மேலும், நல வாரியத்தில் உறுப்பினராக விரும்பும் ஏதேனும் ஒரு போதகர் தேவாலயங்கள் இருந்தால், அத்தகைய ஒற்றை போதகர் தேவாலயங்களின் விண்ணப்பம் பெந்தெகொஸ்தே மாமன்றத்தின் (The Synod of Pentecostal Churches) மூலம் அனுப்பப்படலாம்.

4. மேற்காணும் சூழ்நிலையில், 2021-22-ஆம் ஆண்டுக்கான இத்துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயற்படுத்தும் பொருட்டு, சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து பின்வருமாறு ஆணையிடுகிறது:

i) கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைப்பதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்படுகிறது;

ii) கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் உறுப்பினர் – செயலராக சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் நியமனம் செய்யப்படுகிறார்;

iii) உலமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைகள் அனைத்தையும் புதிதாக உருவாக்கப்பட உள்ள மேற்படி வாரிய உறுப்பினர்களுக்கும் வழங்க ஒப்புதல் வழங்கப்படுகிறது;

iv) மேற்படி வாரியத்திற்கான செயல்வரம்புகள் (Terms of Reference) பின்வருமாறு:

அ) வாரியத்தில் உறுப்பினராவதற்கு

i) 18 வயது பூர்த்தி செய்து 60 வயதிற்குள்ளாக இருத்தல் வேண்டும்;

ii) கிறித்துவ மதத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்;

iii) சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் குறைந்தது ஏழு ஆண்டுகள் பணி செய்திருக்க வேண்டும். அதற்கான சான்றிதழை பத்தி 3-இல் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ள திருச்சபையிடமிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும்;

ஆ) கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்கள் மற்றும் குடும்பத்தினரைக் கண்டறிந்து அடையாள அட்டைகள் வழங்கும் பணியினை அந்தந்த மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்;

இ) உறுப்பினர் பதிவுக்குரிய விண்ணப்பங்களை தகுதி வாய்ந்த நபருக்கு வழங்கி அவர்களிடமிருந்து பெறப்பட்ட உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பங்களைத் தொகுத்து, உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் வழங்குவர். நிதி உதவி வழங்கக்கோரும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து தகுதியான உறுப்பினர்களுக்கு நல உதவிகளை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மூலம் வழங்கப்படும்;

ஈ) வாரிய உறுப்பினர் சேர்க்கைக்குரிய விண்ணப்பப் படிவம், வாரியத்தின் விதிமுறைகள், வாரியத்தின் இதர செயல்பாடுகள் முதலிய அனைத்திற்கும் தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் இதர அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பின்பற்றப்படும் அனைத்து நடைமுறைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்;

உ) பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு மாவட்ட நிருவாகத்திற்கு தேவையான நிதி கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் நிதியிலிருந்து வழங்கப்படும்;

ஊ) வாரியத்தின் மூலமான நிதி உதவிகள் யாவும் தகுதியான நபர்களுக்கு மட்டுமே அளிக்கப்படும். வேறு நல வாரியங்களில் உறுப்பினராக உள்ளோருக்கு, ஏதேனும் ஒரு நல வாரியத்தின் மூலம் மட்டும்தான் நலத்திட்ட உதவிகளைப் பெற தகுதியுடையவர் ஆவர்;

எ) வாரியத்தின் பணிகள் மாவட்டங்களில் சீராக நடைபெறுவதைக் கண்காணிக்கவும் ஆய்வு செய்யவும் மாநில அளவில் கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்திற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது;

ஏ) வாரிய உறுப்பினர்களுக்கு நிதியுதவி வழங்க, மாவட்டத்திற்கு தேவையான நிதியை, ஒதுக்கீடு செய்ய சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

5. மேலும், கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் செயல்பாட்டிற்குத் தேவையான பணியிடங்கள் மற்றும் நிதி ஒப்பளிப்பு குறித்து விரிவான கருத்துருவை அரசின் பரிசீலனைக்கு அனுப்புமாறு சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத் தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம் குறித்த கருத்துருவை தனியே அரசின் பரிசீலனைக்கு அனுப்புமாறு சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை, நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண்.24735/நிதி(பி,மிபி(ம)சிந)/2022, நாள் 20/05/2022-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலத்துறை,
சென்னை-5.
உறுப்பினர்-செயலர்,
தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், சென்னை-2.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
மாநில கணக்காயர், சென்னை-18.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ்
தமிழர் நலத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மைத் தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9.
அரசு சிறப்புச் செயலாளரின் நேர்முக உதவியாளர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9.
நிதி (பி, மிபி(ம)சிந) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

25/5/22
பிரிவு அலுவலர்